21.11.2025
MC.1/2022
RW-1, ரெங்கராஜ் த/பெ.நம்மாழ்வார்

(மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆஜர். மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடன் உடன் பிறந்தவர்கள் 6 பேர் என்னுடன் சேர்த்து மொத்தம் 7 பேர். 1 வது மனுதாரர் எனது உடன்பிறந்த 3 வது சின்ன அக்காள் என்றால் சரிதான். 1வது மனுதாரரின் சகோதரியின் மகளை தான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் 2002ம் வருடம் எல்லைப்பாதுகாப்பு படை BSFல் வேலைக்கு சேர்ந்தேன். 2004ம் வருடம் நான் திருமணம் செய்துள்ளேன். திருமணத்தின் வாயிலாக 2ம் மனுதாரர் எனக்கு பிறந்தார் என்றால் சரிதான். நான் BSFல் வேலை செய்யும் போது எனது மனைவியை எனது உடன்பிறந்த 1வது மனுதாரர் தான் பார்த்துக்கொண்டார் என்றால் சரிதான். அப்போது நாங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்தோம். நான் விடுமுறைக்கு வரும் போது தான் குடும்ப பிரச்சினை ஏற்பட்டு எனது மனைவி தூக்கு போட்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருக்கு மனதளவில் பிரச்சினை இருந்தது. எனது மனைவி இறந்துவிட்டதால் காவல் நிலையத்திற்கு செல்லவிடாமல் நான் தான் தடுத்தேன் என்றால் சரியல்ல. எனது மனைவி இறந்தபிறகு எனது குழந்தையை 1ம் மனுதாரர் தான் பார்த்துக்கொண்டார் என்றால் சரியல்ல. எனது அம்மா தான் பார்த்துக்கொண்டார். இந்த விபரத்தை நான் எனது மனுவிலோ அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. எனது மகன் தற்போது எங்கு படிக்கிறார் என்றால் அரசு மேல்நிலைப்பள்ளி கே.வெள்ளாகுளத்தில் படிக்கிறார். எனது மகனின் ஆதார் காடு, ரேசன்கார்டு போன்றவை யார் முகவரியில் உள்ளது என்று சொன்னால் எனது முகவரியில் உள்ளது. நான் தற்போது எங்கு குடியிருக்கிறேன் என்றால் பசுமலையில் 2வது மனைவியுடன் குடியிருந்து வருகிறேன். எனது 2 வது மனைவிக்கு முதல் கணவர் மூலம் பிறந்த குழந்தையுடன் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். அந்த குழந்தையையும் எனது 2வது மனைவியையும் நான் தான் பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான். தற்சமயம் குடியிருக்கும் மதுரை மாவட்டத்தை சொல்லாமல் எனது நிரூபண வாக்குமூலத்தில் ஒரிசாவில் குடியிருப்பதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால்

நான் சர்வீஸில் இருந்தேன். அதனால் கொடுத்தேன். நான் 31.01.2024ல் விருப்ப ஓய்வு பெற்றேன். விருப்ப ஓய்வு 31.01.2024ல் பெற்ற பிறகு நான் கடந்த 14.11.2025அன்று எனது நிரூபண வாக்குமூலத்தில் ஒடிசா மாநிலத்தில் குடியிருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் அது தவறு தான். நான் நிரூபண வாக்குமூலத்தை படித்து பார்க்காமல் கையெழுத்து போட்டுள்ளேன் என்றாலும் அதனால் அதன் விபரங்கள் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

நானும் எனது குடும்பத்தாரும் 2ம் மனுதாரரை பராமரிக்காததால் 1ம் மனுதாரர் எனது முதல் மனைவியின் சகோதரி என்பதால் அவர் சட்டப்படி இயற்கை காப்பாளர் என்ற முறையில் வருவாரா என்றால் அவர் வரமாட்டார். 2ம் திருமணம் செய்து கொண்டு 2 குழந்தைகளையும் பெற்றுவிட்டதால் நான் எனது மூத்ததார மனைவியின் குழந்தைக்கு இயற்கை காப்பாளராக வரமாட்டார் என்றால் சரியல்ல. நான் என் குழந்தையை பராமரிக்கவோ பார்க்கவோ நீதிமன்றத்தில் மனு எதும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எனது அண்ணனிடம் 50 சென்ட் தோட்டம் மற்றும் வயக்காட்டை கொடுத்து அதில் உள்ள வருமானத்தை அவர்தான் எடுத்து வருகிறார் என்றாலும் 1ம் மனுதாரராகிய உண்மையான இயற்கை காப்பாளரிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது அண்ணன் இயற்கை காப்பாளராக வரமாட்டாரா என்றால்சரியல்ல. எனது அண்ணனும் எனது அம்மாவும் 2ம் மனுதாரரை வளர்த்து வருவதாக சொல்வதற்கு ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால் சரியல்ல. நான் வேலைக்கு செல்லும் போது கூட எனது அண்ணனுக்கும் எனது அம்மாவுக்கும் 2ம் மனுதாரரை பார்த்துக்கொள்ள ஏதேனும் எழுத்துபூர்வமான ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 2ம் மனுதாரரை எனது அண்ணனும் எனது அம்மாவும் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எல்லைப்பாதுகாப்பு படைக்கு 12ம் வகுப்பு படித்துவிட்டு சென்றேன். மத்திய அரசாங்கத்தின் பாதுகாப்பு படை பிரிவில் எந்தெந்த படை பிரிவுக்கு எந்த தலைமை உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் சரிதான். எல்லைப்பாதுகாப்பு படை மத்திய அமைச்சரின் கட்டுக்குள் உள்ளது என்றால் சரிதான். முப்படையில் உள்ளவர்களுக்கு தான் சி.பி.எஸ்.சி பள்ளிக்கான முன்னுரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அனைத்து பாரா மிலிட்டரி சர்வீஸ் உள்ளவர்களுக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் சி.பி.எஸ்.சி பள்ளியில் முன்னுரிமை கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் இதையெல்லாம் மறைத்து தான் நான்

மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது சொத்தை நான் உரிய நபர்களான எனது உடன்பிறந்தவர்களுக்கு எழுதிக்கொடுக்காமல் ஆண் மகன்களால் சேர்ந்து பிரித்து கொண்டதால் எனது சகோதரிகள் அனைவரும் பத்திர பதிவை ரத்துசெய்ய கள்ளிக்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் மனு செய்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

நான் எனது சொத்து மூலம் 1ம் மனுதாரர் வருமானம் பெற்று வருகிறார் என்பது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். ஆனால் நான் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. எனது மனனை பார்ப்பதை தடுத்ததால் நான் அதுசம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் எனது மகனுக்கு எவ்வித பராமரிப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது அண்ணன் அவருடைய குழந்தைகளை தான் பார்ப்பார் என்றாலும் எனது குழந்தையை பார்க்கமாட்டார் என்றால் சரியல்ல. எனது மகன் தற்போது யாரிடம் உள்ளார் என்றால் எனது அம்மாவிடம் உள்ளார். எனது குழந்தை 1ம் மனுதாரர் வசம் தான் உள்ளது என்றால் சரியல்ல. 2ம் மனுதாரரை பார்த்து பராமரிக்க எனக்கு கடமையுள்ளது என்றால் சரியல்ல வழக்கிற்காக நான் மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. விருப்ப ஓய்வு பெற்று அதில் கிடைத்தது எவ்வளவு பணம் என்றால் எனக்கு தெரியாது. BF எவ்வளவு பிடித்தார்கள் என்றால் ரூ.25,000/- பிடித்தார்கள். அவ்வப்போது மாறும். 22 வருடங்கள் வேலை பார்த்தேன். நான் வேலையில் சேரும் போது ரூ.3000/- சம்பளம் பெற்றேன். நான் கடைசியில் பெற்ற சம்பளத்தில் 25,000/- பிடித்தார்கள் என்று சொன்னேன். எனக்கு அடிப்படை சம்பளம் ரூ.35,000/- க்கு மேல் உள்ளது என்றாலும் அதனால் நான் ரூ,65,000/-க்கு சம்பளம் பெற்று வந்தேன் என்றால் சரியல்ல. நான் தற்போது ஓய்வூதியமாக மாதம் 22,500/- பெற்று வருகிறேன். நான் தற்போது ஓய்வூதியத்தை வாங்கி சொத்துக்கள் மற்றும் செலவுகள் செய்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் இந்த விபரத்தை Affidavit of Asset and liability – ல் சொல்லியுள்ளேனா என்றால் ஆம். நான் 2ம் திருமணம் செய்ததால் நான் நான் ஊருக்குவரவில்லை என்றால் சரியல்ல. நான் கடந்த வாரம் 1ம் மனுதாரரை நான் சத்தம் போட்டு மிரட்டினேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இந்த வழக்கு பின்னிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.